# IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI

## MCOP.No.35/2024

Deposition of witness for **PW1** for Petitioner and solemnly affirmed and oath for sworn taken file by Tr.S.Prakash, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Govindaraj | Father Name | : | Periyasamy |
| Village | : | | Age | : | |

**நாள்:12.02.2026.**

**ம.சா.1. முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கில் மனுதாரர், ம.சா.1 ஆக இருந்து எனது முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதனை சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். அசல் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை சான்றாவணங்களாக பெற வேண்டுகிறேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்யவேண்டுகிறேன்.

| S.No | Exhibits | Description |
|---|---|---|
| 1 | ம.த.சா.ஆ.1 | 24.06.2024 ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் |
| 2 | ம.த.சா.ஆ.2 | 27.06.2024 ம் தேதியிட்ட இஷாந்த் மருத்துவமனையின் விடுவிப்பு சான்றிதழ் |
| 3 | ம.த.சா.ஆ.3 | TN 22 BW 3363 என்ற வாகனத்தின் பதிவு சான்று ஜெராக்ஸ் நகல் |
| 4 | ம.த.சா.ஆ.4 | TN 22 BW 3363 என்ற வாகனத்தின் காப்பீடு பாலிசி ஜெராக்ஸ் நகல் |
| 5 | ம.த.சா.ஆ.5 | மனுதாரின் வங்கி கணக்கு புத்தகம் ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பிட்டு சரிப்பார்க்கப்பட்டது. |
| 6 | ம.த.சா.ஆ.6 | மனுதாரின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பிட்டு சரிப்பார்க்கப்பட்டது. |
| 7 | ம.த.சா.ஆ.7 | மனுதாரின் PAN Card ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பிட்டு சரிப்பார்க்கப்பட்டது. |
| 8 | ம.த.சா.ஆ.8 | இஷாந்த் மருத்துவமனையின் பில்கள் ரூ.52,964/- |

மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை 2ம் எதிர்மனுதாரர் தரப்பில்**

நான் சென்ற இருசக்கர வாகனம் TN 29 BQ 4161 யாருக்கு சொந்தமானது என்றால் என்னுடைய வாகனம் ஆகும். எனது பெயரில் இருக்கிறது. விபத்தின் போது அந்த வாகனத்தை நான் தான் ஓட்டி சென்றேன். எனது வாகனத்தின் பின்புறம் என்னுடன் வேலை செய்யும் மாதேஷ் அமர்ந்து வந்தார். இராயப்கோட்டை டு தருமபுரி போகும் போது விபத்து ஏற்பட்டது. என்னுடன் வந்த மாதேஷ் என்பவருக்கு விபத்தின் போது காயம் ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. அவருக்கு கண்ணில் லேசாக அடிப்பட்டதால் அவர் வழக்கு போடவில்லை. விபத்தின் போது எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. இருந்தது தொலைந்து விட்டது. எங்கு ஓட்டுநர் உரிமம் வாங்கினேன் என்றால் தருமபுரி RTO அலுவலகத்தில் வாங்கினேன். எப்போது வாங்கினேன் என்றால் 20, 30 வருடம் இருக்கும். விபத்திற்கு பிறகு எனது வாகனத்தை RTO அலுவலகத்திற்கு எடுத்து சென்றேன். எனது வாகனத்திற்கு எங்கெங்கு அடிப்பட்டிந்தது என்பதை ஆய்வாளர் குறித்து கொண்டார். ஆய்வின் போது நான் ஓட்நர் உரிமம், காப்பீடு பாலிசி கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது எனது வாகனத்திற்கு உண்டான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் கணினி நகல் என்றால் சரிதான் அது **எ.ம.சா.ஆ.1** ஆகும். அதே போல் TN 22 BW 3363 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை என்னிடம் காட்டப்படுவது தான் அது. **எ.ம.சா.ஆ.2** ஆகும். பேருந்தின் முன்பக்க படிக்கட்டில் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் தான் பஸ்சினை ஓவர் டேக் செய்து வலது பக்கம் திரும்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு தலை, கழுத்து, இடது கை, முட்டி, கால் ஆகிய இடங்களில் அடிப்பட்டது. இடது கையில் ராடு வைக்கப்பட்டுள்ளது. எனக்கு இடது கை மணிக்கட்டு மற்றும் இடது கை தோள்பட்டை ஆகிய இடங்களில் மட்டும் தான் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றால் சரியல்ல. இடது கையில் வைக்கப்பட்டுள்ள ராடு இன்னும் எடுக்கப்படவில்லை. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவமனைபில்களை மருத்துவமனை நிர்வாகத்தை விசாரித்து நிருப்பித்தால் எனக்கு கிடைக்க தக்கது என்றால் சரியல்ல. இந்த விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயம் சரியாகிவிட்டது என்றும் எனக்கு வருமான இழப்போ, நிரந்தர ஊனமோ, செயல் திறன் குறைபாடோ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்தின் போது நான் சென்டரிங்க் வேலை பார்த்து வந்தேன். தற்போது நான் வேலை பார்த்து வருகிறேன் என்றும் வழக்கிற்காக நான் பொய்யா சொல்கிறேன் என்றால் சரியல்ல. **2** வது மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்

என்றால் சரியல்ல. எனக்கு வழங்கப்பட்டுள்ள ஊன சான்றிதழ் மிகைப்படுத்தி வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஓம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.